**<u>சார்பு நீதிமன்றம், திருவாரூர்</u>**

முன்னிலை- **திரு.M.முருகன், M.L.,**

**சார்பு நீதிபதி, திருவாரூர்.**

2026-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12-ஆம் நாள், வியாழக்கிழமை

(திருவள்ளுவராண்டு 2056, ஸ்ரீ விசுவாவசு வருடம், மாசித்திங்கள் 28-ஆம் நாள்)

**<u>அ.வ.எண்.90/2023</u>**

(CNR.NO.TNTV03-000354-2023)

1. மாரிமுத்து (இறந்தார்)

2.வளர்மதி

3. சக்திவேல்

(இ.ம.எண்.2/2024-ல் கடந்த 28.10.2024 ஆம் தேதி

ஏற்பட்ட உத்தரவின் படி திருத்தப்பட்டது) .. வாதிகள்

// எதிராக //

1. மருதம்பாள்

2. கார்த்திகேசன்

(இ.ம.எண்.1/2024-ல் கடந்த 03.09.2024 ஆம் தேதி

ஏற்பட்ட உத்தரவின் படி திருத்தப்பட்டது)

3. சுந்தரி .. பிரதிவாதிகள்

இவ்வழக்கு இறுதியாக கடந்த 12.02.2026-ம் தேதி விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.T.P.S.மணிக்கண்ணன் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 3 பிரதிவாதிகள் கற்றறிந்த வழக்கறிஞர் மூலம் ஆஜரான போதிலும் போதிய கால அவகாசம் வழங்கப்பட்டும், எதிருரை தாக்கல் செய்யாததாலும், எதிர்மனுதாரரை இந்நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததாலும் அவருக்காக யாரும் முன்னிலையாகாததாலும் 1 முதல் 3 பிரதிவாதிகளை தோன்றாதரப்பினராக்கியும், வாதி தரப்பு வாதுரை கேட்கப்பட்டும், சாட்சிய, சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இவ்வழக்கில், இன்றே இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்...

**<u>தீர்ப்புரை</u>**

தாவா சொத்தில் இருந்து வரும் பிரதிவாதிகள் சொத்தை வாதிகள் வசம் ஒப்புவிக்க உத்தரவிட்டும், பிரதிவாதிகள் தாவா சொத்தினை வசம் ஒப்படைக்க தவறும் பட்சத்தில் நீதிமன்றம் மூலமாக தாவா சொத்தை வாதிகளுக்கு வசம் எடுத்து தர உத்தரவிட்டும் மற்றும் தாவா செலவுத்தொகையும் சேர்த்து வாதிக்கு செலுத்த பிரதிவாதிகளுக்கு உத்தரவிட்டும், இதர பரிகாரங்கள் வழங்கி தீர்ப்பு, தீர்ப்பாணை வழங்க வேண்டி வாதியால் இத்தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **<u>தாவா வழக்குரையின் சுருக்கம் :-</u>**

தாவா சொத்தானது 1ஆம் வாதியின் கணவரும், 2, 3 வாதிகளின் தகப்பனாருமான முருகையன் என்பவருக்கு பூர்வீகமாக கிடைத்து அனுபவித்து வந்த நிலையில் முருகையன் தாவா சொத்தைப்பொறுத்து எந்த ஆவணமும் எழுதி வைக்காமல் 27.01.2004 ல் இறந்து விட்டார் என்றும் அது முதல் தாவா சொத்து வாதிகளின் அனுபவத்தில் இருந்ததால் தாவா சொத்திலிருந்த கூரை வீட்டில் பிரதிவாதி குடியிருக்க உறவினர்கள் என்ற முறையில் வாதிகளிடம் அனுமதி கேட்டதில் வாதிகள் 2010 ஆம் வருடம் அனுமதி கொடுத்தனர் என்றும் பின்னர் பிரதிவாதி குடியிருந்த கூரை வீடு இடிந்து விட்டதால் தற்போது காலி மனையாக உள்ளது என்றும் அதனை சாதகமாக பயன்படுத்திக்கொண்டு பிரதிவாதி தாவா சொத்திற்கு அவர்கள் பெயரில் பட்டா பெயர் மாற்றம் செய்ய முயற்சி செய்து வருவதை அறிந்து பிரதிவாதி பெயரில் இந்த வாதிகள் கொடுத்த அனுமதியை ரத்து செய்து வழக்கறிஞர் அறிவிப்பை கடந்த 15.11.2022-ல் அனுப்பப்பட்டதில் 3ம் பிரதிவாதி மட்டும் 18.11.2022 அன்று பொய்யான தகவல்களை கொண்டு பதிலறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றும் பின்னிட்டும் பிரதிவாதி தாவா சொத்தை வாதிகளிடம் ஒப்படைக்காததால் வாதிகள் வேறு வழியின்றி தாவா சொத்தைப்பொறுத்து சுவாதீனப்பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள்.

3. இத்தாவா சம்பந்தமாக 1 முதல் 3 பிரதிவாதிகள் கற்றறிந்த வழக்கறிஞர் மூலம் ஆஜரான போதிலும் போதிய கால அவகாசம் வழங்கப்பட்டும், எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததாலும், 1 முதல் 3 பிரதிவாதிகளை இந்நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததாலும் அவருக்காக யாரும் முன்னிலையாகாததாலும் 1 முதல் 3 பிரதிவாதிகளை தோன்றாதரப்பினராக்கி இந்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

4. இத்தாவாவில் வாதி தரப்பில் வாதி வா.சா.1 ஆக வாதி தரப்பில் முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் 10 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5.<u>**தீர்வு :-**</u>

5.1. வாதி தரப்பில் எடுத்துரைக்கப்பட்டதன் அடிப்படையில் இந்நீதிமன்றம் வழக்கு கோப்பை பரிசீலனை செய்ததில் அசல் வழக்கை பிரதிவாதிகள் தொடர்ந்து எதிர்வாதம் செய்யாத போதிலும் வாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்கை வாதிகளே நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார்கள். அதன் அடிப்படையில் இந்நீதிமன்றம் வாதிகள் தரப்பில் முன்னிறுத்தப்பட்ட சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்ததில் வா.சா.ஆ.1 ஆவணமானது 1ம் வாதியின் கணவரும், 2, 3 வாதிகளின் தகப்பனாருமான முருகையன் பெயரில் பட்டா வழங்கப்பட்டு இருப்பதை வா.சா.ஆ.1 ஆவணத்தின் மூலம் அறிய முடிகிறது. மேலும் முருகையன் எவ்வித ஆவணமும் எழுதி வைக்காமல் 27.01.2004 ல் இறந்து விட்டார் என்பதையும் வா.சா.ஆ.2 இறப்புச்சான்று மூலமாகவும் முருகையனுக்கு வாதிகள் மட்டுமே வாரிசுகள் என்பதை வா.சா.ஆ.3 ஆவணமான வாரிசு சான்று மூலமாகவும் இந்நீதிமன்றம் அறிய முடிகிறது.

5.2. வாதிகள் தாவா சொத்தில் பிரதிவாதிகள் குடியிருக்க கொடுத் அனுமதியை ரத்து செய்து வா.சா.ஆ.5 ஆவணத்தின் மூலம் அறிவிப்பு கொடுத்த நிலையில் பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டு போதிலும் 3ம் பிரதிவாதி மட்டும் வா.சா.ஆ.7 ஆவணத்தின் படி பதிலறிவிப்பு கொடுத்திருப்பதை அறிய முடிகிறது. வாதிகள் தரப்பு வழக்கின் படி தாவா சொத்துக்கள் புல எண்.474 ஆகும். ஆனால் பிரதிவாதி கொடுத்த பதிலறிவிப்பில் வாதிகளுக்கு சொந்தமான புல எண்.474-ஐ ஆக்கிரமிக்கவில்லை என்றும் பிரதிவாதிகள் அனுபவித்து வரும் சொத்தின் புல எண்.483/5 ஆகும் என்றும் தெரிவித்திருப்பதை அறிய முடிகிறது. இந்நீதிமன்றத்தில் விவாதத்தின் போது நீதிமன்றத்தை குழப்பும் விதமாக 3ம் பிரதிவாதி மட்டும் புல எண்.474-ல் பிரதிவாதிகள் மூவரும் அனுபவம் செய்து வருகின்ற போதும் பிரதிவாதிகள் குடியிருந்து வரும் சொத்தின் புல எண்.483/5 என வேண்டுமென்றே தெரிவிக்கப்பட்டுள்ளது என எடுத்துரைக்கப்பட்டது.

5.3. இவ்வழக்கில் வாதிகள் வழக்கை மறுக்கும் வகையில் பிரதிவாதிகள் தரப்பில் எவ்வித வாய்மொழி, ஆவண சாட்சியத்தையும் முன்னிறுத்தவில்லை. மேலும் வாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்கில் புல எண்.474 ஆனது முருகையனுக்கு பாத்தியப்பட்டது என்பதை வா.சா.ஆ.1, 10 ஆவணங்கள் மூலம் இந்நீதிமன்றத்தில் நிரூபித்துள்ள காரணத்தினால் தாவா சொத்து வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்பதை இந்நீதிமன்றம் அறிய முடிகிறது. பிரதிவாதிகள் குடியிருக்கும் புல எண்.474 என்று வாதிகள் தரப்பில் அறுதியிட்டு எடுத்துரைக்கப்பட்டுள்ளதாலும் வாதிகள் தரப்பில் வாய்மொழி சாட்சியம் அளித்துள்ளதனாலும் தாவா சொத்தான புல எண்.474-ஐ பிரதிவாதிகள் ஆக்கிரமித்திருந்தால் சொத்தை வாதிகளிடம் இந்நீதிமன்றம் அமீனா மூலம் சுவாதீனம் கொடுக்க வாய்ப்புள்ளது. அதே போல் புல எண்.474-ல் பிரதிவாதிகள் அனுபவம் செய்யவில்லை என்றால் வாதிகள் நேரடியாக அமீனா மூலம் சுவாதீனம் எடுத்துக்கொள்ள அதிக வாய்ப்புள்ளது. எனவே

வாதிகளுக்கு தாவாவில் கோரும் பரிகாரம் வழங்காவிட்டால் வாதிகளுக்கு பெருத்த நஷ்ட, கஷ்டம், இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளதனால் தாவா சொத்தைப்பொறுத்து வாதிகள் கோரும் பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது. பிரதிவாதிகள் இவ்வழக்கை தொடர்ந்து எதிர்வாதம் செய்யாததால் வாதிகளின் தாவாவை செலவுத்தொகையின்றி அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

**தீர்ப்பு பகரப்பட்டது. இறுதியாக, தாவா சொத்தை பிரதிவாதிகள் வாதிகள் வசம் தீர்ப்பு பகரப்பட்ட தேதியிலிருந்து 60 தினங்களுக்குள் சுவாதீனம் ஒப்படைக்க உத்தரவிட்டு இந்நீதிமன்றம் தீரப்பு வழங்குகிறது. செலவுத்தொகையில்லை.**

இந்த தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026-ம் ஆண்டு மார்ச் மாதம் 12-ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ஒம்/-(M. முருகன்)
சார்பு நீதிபதி,
திருவாரூர்.

**வாதி தரப்பு சாட்சிகள்:-**

வா.சா.1 – திரு.சக்திவேல் (வாதி)

**வாதி தரப்பு சான்றாவணங்கள்:-**

12.03.2025

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 19.09.2017 | 1 ஆம் வாதியின் கணவரும் 2, 3 வாதிகளின் தகப்பனாரான முருகையன் பெயரில் T.S.No.474/5 க்கு உரிய TSLR |
| வா.சா.ஆ.2 | 14.03.2023 | முருகையன் இறந்ததற்கு திருவாரூர் நகராட்சி வழங்கிய இறப்பு சான்றிதழ் - அசலுடன் சரிபார்க்கப்பட்ட கணினி நகல் |
| வா.சா.ஆ.3 | 29.03.2023 | திருவாரூர் வட்டாட்சியர் வழங்கிய முருகையனின் வாரிசு சான்றிதழ் - அசலுடன் சரிபார்க்கப்பட்ட கணினி நகல் |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.4 | -- | தாவா சொத்துக்குரிய வழிகாட்டி மதிப்பு |
| வா.சா.ஆ.5 | 15.11.2022 | வாதி வழக்கறிஞர் மூலம் 3 ஆம் பிரதிவாதிக்கு அனுப்பிய அறிவிப்பு |
| வா.சா.ஆ.6 | -- | 3 ஆம் பிரதிவாதி மேற்படி அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை |
| வா.சா.ஆ.7 | 18.11.2022 | 3 ஆம் பிரதிவாதி அனுப்பிய பதில் அறிவிப்பு |
| வா.சா.ஆ.8 | -- | தாவா சொத்தை காண்பிக்கக்கூடிய புகைப்படம் குறுந்தகடுடன் |
| வா.சா.ஆ.9 | --- | 3-ஆம் வாதியின் ஆதார் அட்டை - அசலுடன் சரிபார்க்கப்பட்ட நகல் |
| வா.சா.ஆ.10 | 29.01.1945 | வாதிகளின் பாட்டனார் அவரது மனைவிக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரம் |

**<u>பிரதிவாதி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>:-** இல்லை.

ஒம்/-(M. முருகன்)
சார்பு நீதிபதி,
திருவாரூர்.